## January 18, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளில் அதிக மாடுகளை அடக்கும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடைப் பராமரிப்புத் துறையில் அரசுப் பணி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

(i) மதுரை அலங்காநல்லூரில் தமிழர் திருநாளையொட்டி நடைபெற்ற உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது: சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் அறிவு வளர்ச்சிக்காக கலைஞர் நூற்றாண்டு நூலகத்தையும், வீரமிக்க விளையாட்டான ஜல்லிக்கட்டுக்காக கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தையும் அரசு கட்டித் தந்துள்ளது. தமிழகத்தின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு போட்டியை ஊக்குவிக்கும் வகையில், இந்தப் போட்டியில் அதிக காளைகளை அடக்கும் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடைப் பராமரிப்புத் துறையில் அரசுப் பணி வழங்க வழிவகை செய்யப்படும்.

(ii) இதேபோல, உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கு சிறப்பு உயர்தர சிகிச்சை மையம், பயிற்சி மையம் ரூ.2 கோடியில் அமைக்கப்படும்.

2. ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில்

ரூ.3 கோடியில் புதிதாகக் கட்டப்பட்ட தியாகி இமானுவேல் சேகரனார் மணிமண்டபம், அவரது உருவச் சிலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

(i) சுதந்திரப் பரமக்குடியில் போராட்டத் தியாகி இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்திருந்தார். இதற்காக பரமக்குடி நகராட்சி வாரச் சந்தை வளாகத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, ரூ.3 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

3. சட்டத்தை மீறி அனுமதிக்கப்படாத வாக்கி-டாக்கிகளை விற்பனைக்குப் பட்டியலிட்டது உள்ளிட்ட விதி மீறல்களுக்காக முகநூல் சந்தை தளமான மெட்டா, அமேஸான், ஃபிளிப்கார்ட், மீஷோ ஆகிய இணைய வணிக நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சம் அபராதத்தை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) விதித்துள்ளது.

(i) அதுபோல, நுகர்வோர் உரிமைகளை மீறியது, அவர்களைத் தவறாக வழிநடத்தும் வகையில் விளம்பரம் வெளியிட்டது. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைப் பின்பற்றியது உள்ளிட்டக் காரணங்களுக்காக சின்மியா, ஜியோமார்ட், டாக் ப்ரோ, மாஸ்மேன் டாய்ஸ் உள்ளிட்ட இணைய வணிக நிறுவனங்களுக்கு தலா

ரூ.1 லட்சம் அபராதத்தை சிசிபிஏ விதித்துள்ளது.

(ii) வாக்கி-டாக்கி கருவிகள் மூலம் பரிமாறிக் கொள்ளப்படும் தகவல்களை யாரும் இடைமறித்து கேட்க ஒட்டுக் முடியாது. பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவோர், பெரும்பாலும் இத்தகைய கருவிகளையே தகவல் தொடர்புக்குப் பயன்படுத்துகின்றனர்.

(ii) இதுபோன்ற தகவல்தொடர்பு சாதனங்ளை முறையான அதிர்வலை விவரங்களை வெளியிடாமலும், உரிமத் தகவல்களைத் தெரிவிக்காமலும் விற்பனை செய்வது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-ஐ மீறும் செயலாகும்.

(iii) இதனிடையே, வாக்கி-டாக்கி உள்ளிட்ட ரேடியோ கருவிகளை இணைய வணிக நிறுவனங்கள் விற்பனை செய்வதை தடுப்பது மற்றும் முறைப்படுத்துவது தொடர்பாக கடந்த 2025-ஆம் ஆண்டு வழிகாட்டுதலையும் சிசிபிஏ அறிவிக்கை செய்தது.

(iv) இந்த விதிகளை மீறி வாக்கி-டாக்கி உள்ளிட்ட கருவிகளை விற்பனைக்குப் பட்டியலிட்ட அமேஸான், ஃபிளிப் கார்ட் உள்பட 13 இணைய வணிக நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு சிசிபிஏ அண்மையில் நோட்டீஸ் பிறப்பித்தது.

(v) ஆனால், அதன் பிறகும் இந்த இணைய வணிக நிறுவனங்களில் வாக்கி-டாக்கி உள்ளிட்ட கருவிகள் விற்பனைக்குப் பட்டியலிடப்பட்டிருப்பதும், நிகர்வோர் உரிமைகளை மீறியதும் தெரியவந்தது. அதனடிப்படையில், இந்த நிறுவனங்களுக்கு சிசிபிஏ அபராதமும் விதித்துள்ளது.

(vi) மேலும், உரிய தரம் மற்றும் வழிகாட்டுதல்களைப் பூர்த்தி செய்யாத 16,970 பொருள்கள் மற்றும் கருவிகள் விற்பனைக்குப் பட்டியலிட்டிருப்பது தொடர்பாக சின்மியா, ஜியோமார்ட், டாக் ப்ரோ, மீஷோ, மாஸ்க்மேன் டாய்ஸ், ட்ரேட் இந்தியா, அந்திரிக்ஷ் டெக்னாலஜிஸ், வர்தான்மார்ட், இந்தியாமார்ட், மெட்டா, ஃபிளிப்கார்ட், கிருஷ்ணா மார்ட், அமெசான் உள்ளிட்ட 13 இணைய வணிக நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டும் சிசிபிஏ நோட்டீஸ் பிறப்பித்துள்ளது என்றார்.

4.கிழக்கு ஆப்பிரிக்க நாடான உகாண்டாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், தற்போதைய அதிபர் யோவேரி முசேவேனி அமோக வெற்றிப்பெற்று 7-ஆவது முறையாகப் பதவியைத் தக்கவைத்துக் கொண்டார்.

(i) உகாண்டாவில் அதிபர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி, 81 வயதாகும் அதிபர் முசேவேனி 71.65 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரபல இசைக்கலைஞரும், இளம் அரசியல் தலைவருமான பாபி வைன் 24.72 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

(ii) 40 ஆண்டுகால ஆட்சி: கடந்த 1986-ஆம் ஆண்டு முதல் உகாண்டாவின் அதிபராக முசேவேனி இருந்து வருகிறார். சுமார் 40 ஆண்டுகளாக ஆட்சியில் நீடிக்கும் இவருக்கு எதிராக இந்த முறை கடும் எதிர்ப்பு எழுந்தது. மாற்றத்துக்கான முழக்கத்துடன் களமிறங்கிய பாபி வைனுக்கு அந்நாட்டு இளைஞர்களிடையே பெரும் ஆதரவு காணப்பட்டது.

(iii) இந்நிலையில், தனக்கு எதிர்மறையான இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்க பாபி வைன் மறுத்துவிட்டார் என்றார்.

(iv) தொழில்நுட்பக் கோளாறு: வாக்குப்பதிவின் போது வாக்காளர்களை அடையாளம் காணும் 'பயோமெட்ரிக்' கருவிகள் பல இடங்களில் இயங்கவில்லை. குறிப்பாக, எதிர்க்கட்சிகளுக்கு அதிக ஆதரவுள்ள தலைநகர் கம்பாலா போன்ற நகரங்களில் இந்தக் கோளாறால் வாக்குப்பதிவு

தாமதமானது. "இயந்திரங்கள் பழுதானதால், இறுதியில் கையேடுகளைப் பயன்படுத்தி வாக்குப்பதிவு நடத்தி முடிக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. அப்போது, தொழில் நுட்பக் கோளாறுகள் தேர்தலின் நேர்மையை எவ்வாறு பாதித்தன என்பதை அவர்கள் முக்கிய வாதமாக முன்வைக்க வாய்ப்புள்ளது.

5. தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் பலத்த மழை மற்றும் அதன் தொடர்ச்சியான வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் ராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

(i) இந்த மழையினால் தென்னாப்பி ரிக்கா, மொசாம்பிக், ஜிம்பாப்வே ஆகிய நாடுகள் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ளன. இதில் மொசாம்பிக் நாடு மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

(ii) கிருகர் தேசியப் பூங்கா மூடல்:-

தென்னாப்பிரிக்காவில் அமைந்த உலகின் மிகப்பெரிய வனவிலங்கு சரணாலயங்களில் ஒன்றான, 22,000 சதுர கி.மீ. பரந்து விரிந்த கிருகர் தேசியப் பூங்கா வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

(iii) தெற்கு ஆப்பிரிக்க அதிபர் - சிறில் ராமபோசா

6. இஸ்ரேல்- ஹமாஸ் மோதலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள காஸா முனையை மீண்டும் மறுசீர மைக்கவும், அங்கு அமைதியை நிலைநாட்டவும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையில் 'அமைதி வாரியம்' எனும் உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

(i) இந்தக் குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உலக வங்கி தலைவர் அஜய் பங்கா இடம் பெற்றுள்ளார். காஸாவின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது, உள்கட்டமைப்புப் பணிகளுக்கான முதலீடுகளைத் திரட்டும் முக்கியப் பொறுப்பு இவரிடம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) மேலும், அமெரிக்க வெளிபுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் கேப்ரியல், அதிபரின் சிறப்புப் பிரதிநிதி ஸ்டீவ்விட் காஃப்டிரம்பின் மருமகன் ஜாரெட் குஷ்னர் ஆகியோரும் பிரிட்டன் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் மற்றும் துருக்கி, கத்தார், எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இக்குழுவில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

(iii) காஸா பகுதியை முழுமையாக ராணுவ மோதலற்ற இடமாக மாற்றுவது, ஹமாஸ் அமைப்பினரை ஆயுதங்களைக் கைவிடச் செய்வது ஆகிய இரு முக்கிய நோக்கங்களுடன் இந்தக் குழு செயல்படும். இதைத்தவிர, காஸாவின் கடற்கரை பகுதிகளைப் பயன்படுத்தி, அங்கு வர்த்தக ரீதியிலான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் ஜாரெட் குஷ்னர் போன்றோர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

(iv) இந்தக் குழுவில் பெண்கள் மற்றும் பாலஸ்தீன பிரதிநிதிகள் யாரும் இடம்பெறவில்லை

என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், வரும் வாரங்களில் கூடுதல் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

(v) இந்த அமைதி வாரியத்தின் மேற்பார்வையில், காஸாவின் அன்றாடபணிகளைக் கவனிக்க பாலஸ்தீனர்கள் அடங்கிய ஒரு தற்காலிக நிர்வாகக் குழு (என்சிஏஜி) அமைக்கப்பட்டுள்ளது.

(vi) அலி ஷாத் தலைமையில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் முதல்முறையாகக் கூடிய இந்தக் குழு, அடுத்த 3 ஆண்டுகளில் காஸாவில் இயல்புநிலையை மீட்டெடுக்கும் திட்டங்களை ஆலோசித்தது. குறிப்பாக, வீடுகளை இழந்தவர்களுக்கு தங்குமிடம் வழங்குவது போன்ற அவசர பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

7. டென்னிஸ் வீரர்கள்

*மிரா ஆண்ட்ரீவா - ரஷியா,*

*தாமஸ் மசாக் - செக் குடியரசு*

8.தென் ஆப்பிரிக்கா தலைமையிலான கடற்படை பயிற்சி பிரிக்ஸ் கூட்டமைப்பின் கீழ் அதிகாரபூர்வமாக நடத்தப்படாத தால்தான் அதில் பங்கேற்கவில்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது.

(i) தென் ஆப்பிரிக்க கடற்பகுதியில் நடத்தப்பட்ட கடற்படை பயிற்சியில் சீனா, ரஷியா, ஈரான், எகிப்து, இந்தோனேசியா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் கடற்படைகள் பங்கேற்றன. ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வரும் நிலையில் அந்நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம் என்ற காரணத்தால் பதற்றம் ஏற்பட்டுள்ள சூழலில் தென் ஆப்பிரிக்காவில் ஒருவார கால கடற்படை பயிற்சி நடைபெற்றுள்ளது.

(ii) இந்தப் பயிற்சியில் தென் ஆப்ரிக்காவும் இடம்பெற்றுள்ள பிரிக்ஸ் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் பங்கேற்றுள்ள நிலையில், அதே கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள இந்தியா பங்கேற்கவில்லை. இது தொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் இது குறித்து கூறுகையில் 'சம்பந்தப்பட்ட கடற்படை பயிற்சியானது முற்றிலும் தென் ஆப்பிரிக்கா முன்னின்று நடத்தியதாகும். அதில் பிரிக்ஸ் கூட்டமைப்பைச் சேர்ந்த சில உறுப்பு நாடுகள் பங்கேற்றன. அப்பயற்சி அதிகாரபூர்வமான பிரிக்ஸ் நடவடிக்கை அல்ல என்பதால் அதில் இந்தியா பங்கேற்கவில்லை. கடந்த காலங்களிலும் இதுபோன்ற பயற்சிகளில் இந்தியா பங்கேற்றதில்லை. இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படைகளை ஒருங்கிணைக்கும் இப்சாமார் கடற்படைப் பயிற்சியில் மட்டுமே இந்தியா பங்கேற்கிறது. கடைசியாக இந்தப்பயிற்சி கடந்த 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்றது' என்றார்.

(iii) பிரிக்ஸ் கூட்டமைப்பின் தற்போதைய தலைவர் பதவியை இந்தியா வகிப்பது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டமைப்பில் பிரேசில், ரஷியா, இந்தியா,சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள நிலையில் இக்கூட்டமைப்பு கடந்த 2024ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது. அப்போது இக்கூட்டமைப்பில் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய

அரபு அமீரகம் ஆகிய நாடுகளும், 2025இல் இந்தோனேசியாவும் சேர்க்கப்பட்டன.

(iv) பிரிக்ஸ் கூட்டமைப்பில் உலகின் 49.5 சதவீத மக்கள்தொகையும், 40 சதவீத உலகளாவிய ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியும், உலக வணிகத்தில் 26 சதவீத பங்களிப்பும் கொண்டுள்ள நாடுகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

9. மாநிலங்களவையில் மத்திய அரசு கொண்டு வந்த 19 மசோதாக்கள் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருவது தெரியவந்துள்ளது.

(i) இதில் மிகப் பழமையானது 1992-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட மக்கள்தொகை கட்டுப்பாடு தொடர்பான அரசமைப்புச் சட்ட 79-ஆவது திருத்த மசோதாவாகும்.

(ii) நாடாளுமன்ற இரு அவைகளில், மாநிலங்களவை ஒருபோதும் கலைக்கப்படாது. எனவே, இதில் தாக்கல் செய்யப்படும் மசோதாக்களும் ஒருபோதும் காலாவதியாகாது. அதேநேரம், மக்களவை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கலைக்கப்படும் என்பதால், அதில் தாக்கல் செய்யப்படும் மசோதாக்களும் காலாவதியாகிவிடும். அந்த வகையில், மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட 19 மசோதாக்கள் தொடர்ந்து நிலுவையில் இருந்து வருவது தெரியவந்துள்ளது.

(iii) இது தொடர்பாக மாநிலங்களவை அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

நிலுவையில் உள்ள மசோதாக்களில், மக்கள்தொகை கட்டுப்பாடு தொடர்பான 'அரசமைப்புச் சட்ட (79-ஆவது திருத்த) மசோதா 1992' மசோதா மிகப் பழமையானதாகும்.

மக்கள்தொகை கட்டுப்பாடு மற்றும் சிறிய குடும்ப விதி முறையை அரசு ஊக்குவிக்க வேண்டும் என்றும், அடிப்படை கடமைகளில் சிறிய குடும்ப விதி முறையை ஊக்குவித்து ஏற்றுக் கொள்வதையும் சேர்க்க வேண்டும் என்றும் மாநிலக்கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகளைத் திருத்த இந்த மசோதா முன்மொழிந்தது.

மேலும், எம்.பி. அல்லது எம்எல்ஏ இரண்டுக்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றிருந்தால் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் இந்த மசோதா முன்மொழிந்தது.

(iv) தில்லியில் வீட்டு வாடகை சட்டத்தை நவீனமயமாக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட 'தில்லி வாடகை திருத்தச் சட்ட மசோதா 1997, விவசாயிகளுக்கு தரமான விதைகள் விற்பனை, இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்படுவதை முறைப்படுத்தும் வகையில் கொண்டுவரப்பட்ட ‘விதைகள் மசோதா 2004' ஆகியவை பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகின்றன.

(v) ”காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜுனகார்கே, மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் போது தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்தபோது புலம்பெயர் தொழிலாளர்களின் பணி மற்றும் வாழ்க்கை பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கொண்டுவரப்பட்ட 'மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர் தொழிலாளர் நலன் திருத்த மசோதா 2011' தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது.

(vi) அதுபோல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட கட்டடம் மற்றும் பிற கட்டுமான தொழிலாளர் நலன் திருத்த சட்ட மசோதா 2013, காலிப் பணியிடங்களை கட்டாயம் அறிவிக்கை செய்ய வகை செய்யும் 'வேலைவாய்ப்பு அலுவலகங்கள் திருத்த மசோதா 2013',

நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவைத் தொகுதிகளில் எஸ்சி, எஸ்டி பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை மறு சீரமைப்பு செய்யும் மசோதா 2013' உள்ளிட்ட மசோதாக்கள் நிலுவையில் இருந்து வருகின்றன.

(vii) பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அஸ்ஸாம், மேகாலயம், திரிபுரா மற்றும் மிசோரமில் உள்ள தன்னாட்சி கவுன்சில்களின் நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களை மேம்படுத்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமம் மற்றும் நகராட்சி கவுன்சில்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் 2019-ஆம் ஆண்டு வெளிநாடு வாழ் இந்தியர்களின் திருமணப் பதிவு மசோதா மூலம் வடகிழக்கில் பழங்குடியினரின் தன்னாட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'அரசமைப்புச் சட்ட (125-ஆவது திருத்த) மசோதா 2019' மற்றும் 'வேளாண் பூச்சிக்கொல்லி மேலாண்மை மசோதா 2020' ஆகியவை நிலுவையில் உள்ள எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. இண்டிகோவின் தலைமைச் செயல் அதிகாரி - பீட்டர் எல்பர்ஸுக்கு

11. கடல்சார் பாரம்பரியம் மற்றும் அருங்காட்சியகங்கள் குறித்து இந்தியா- ஓமன் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஓமன் நாட்டின் மஸ்கட் நகரில் கையொப்பமானது.

(i) இந்தியா மற்றும் ஓமன் நாடுகளுக்கு இடையே இருந்து வரும் கடல்சார் பாரம்பரியத்தை நினைவு கூரும் வகையில் இந்திய கடற்படை பாய்மரக் கப்பல் ஐஎன்எஸ் கவுண்டின்யா, குஜராத் மாநிலம் போர்பந்தரிலிருந்து தனது பயணத்தைத் தொடங்கி கடந்த அண்மையில் மஸ்கட்டில் உள்ள சுல்தான் கபூஸ் துறைமுகம் வந்தடைந்தது.

(ii) இக்கப்பலை மத்திய அமைச்சர் சர்வானந்த சோனோவால் மற்றும் ஓமன் நாட்டின் போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் சையத் பின் ஹமூத் சையத் மாவாலியுடன் ஆகியோர் இணைந்து வரவேற்றனர்.

(iii) இதையடுத்து நடைபெற்ற இரு தரப்பு பேச்சில், இந்தியா-ஓமன் நாடுகளுக்கிடையே கடல்சார் பாரம்பரியம் மற்றும் அருங்காட் சியகங்கள் அமைப்பது, ஒத்துழைப்பை அதிகரிப்பது உள்ளிட்டவைகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

(iv) அமைச்சர் சோனோவால் பேசியதாவது: பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் இந்தியாவில் கப்பல் கட்டும் தொழிலை மேம்படுத்துதல், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவும் ஓமனும் மேம்பட்ட இணைப்பு, நிலையான கப்பல் முயற்சிகள் மற்றும் துறைமுகங்கள், கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் துறைகளில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பு மூலம் கடல் சார் உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்தி வருகின்றன. பொது-தனியார் கூட்டாண்மை கட்டமைப்பின் கீழ் முதலீடாக சுமார் 9 பில்லியன் டாலர் மதிப்பில் ஆண்டுக்கு சுமார் 23 மில்லியன் சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் திறன் கொண்ட வாதவன் துறைமுகம், சுமார் 4 மில்லியன் பெட்டகங்களைக் கையாளும் திறன் கொண்ட 1.3 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் தமிழ் நாட்டில் உள்ள தூத்துக்குடி வெளி துறைமுகத் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன என்றார்.